மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விடையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஆணைகள் பிறப்பிக்கப்படாமல் இருந்தால், பிறப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

* 298 *Q.*—Thiru S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether Selection Grade has not been given to teachers of "B-Wing" in High Schools which are under the control of Chief Educational Officers in Salem and Dharmapuri Districts; and

(*b*) if so, the reason therefor ?

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம், தருமபுரி மாவட்டங்களில் முதன்மைக் கல்வி அலுவலரின் கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில், "பி" பிரிவில் (B-Wing) பணியாற்றும் ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு வழங்கப்படாமல் உள்ளதா?

(இ) ஆமெனில் ,அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சேலம், தருமபுரி மாவட்டங்களிலுள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் பணி மூப்பு பட்டியல் வருவாய்த் துறை மாவட்ட வாரியாக வரிசைப்படுத்தப்பட்டு, தேர்வுநிலை அளிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டு இருக்கிறது. அதனுல் தேர்வுநிலை பதவிகள் வழங்க முடியவில்லை.

Salary of Teachers

* 299 *Q.*—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of Headmasters and Graduate Assistants in Government (B) High Schools in the Ramanathapuram District, who get a lower salary than their juniors after the revised fixation of salaries according to the recommendations of the Second Pay Commission ; and

(*b*) if so, the reasons therefor?